දුරකථනය
Telephone 2449959
ලේකම්
செயலாளர்
Secretary
ෆැක්ස් අංකය
Fax No. 2445447

E-Mail: secretary@moj.gov.lk

ප්‍රධාන කාර්යාලය
General Office
දුරකථනය
Telephone 2323022
ෆැක්ස් අංකය
Fax No. 2320785

Web Site: www.moj.gov.lk

අධිකරණ සහ ජාතික ඒකාබද්ධතා අමාත්‍යාංශය
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு
Ministry of Justice and National Integration

கா.பெ. தபால்பெட்டி
P.O. Box. 555
ඉලෙක්ට්‍රෝනික තැපෑල
மின்அஞ்சல்
E-mail info@moj.gov.lk

නො 19, ශ්‍රී සංඝරාජ මාවත
கொழும்பு 10
இல 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்த
கொழும்பு 10
No 19, Sri Sangaraja Mw
Colombo 10

මගේ අංකය
எனது இல
My No. MOJ/E05/Rec III

ඔබේ අංකය
உமது. இல.
Your No.

දිනය
திகதி
Date 2026.11.

நியமனதாரர்களுக்கு,

அலுவலக உதவியாளர் சேவையின் தரம் III பதவிக்கான நியமனம் செய்தல்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.02.06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பின் பிரகாரம் 2026.06.08 ஆம் திகதி முதல் 2026.10.13ஆம் திகதி வரை இவ்வமைச்சில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும், ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கு உட்பட்டும் 2026.12.07 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் அலுவலக உதவியாளர் சேவையின் தரம் III இற்கான அலுவலக பணியாளர் பதவிக்கு தகுதி பெற்றுள்ள நியமனதாரர்களின் பெயர் பட்டியலானது இணைப்பு 1 இன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

02. அதற்கமைய, அலுவலக உதவியாளர் சேவையின் தரம் III பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள உங்களின் நியமனக் கடிதங்கள் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2026.12.07 ஆம் திகதி மு.ப.8.00 மணிக்கு கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் நீங்கள் இணைக்கப்பட்டுள்ள நீதி அமைச்சின் கீழ் செயற்படும் நீதிமன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சமூகமளிக்குமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

i. தங்களின் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
ii. பிறப்புச் சான்றிதழ்
iii. பதவிக்குத் தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்வி, ஏனைய கல்வி மற்றும் தொழிற்கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் அதன் நிழற்பிரதிகள் அடங்கிய தொகுப்பு (பரிசோதித்த பின்னர் மூலப்பிரதிகள் மீண்டும் ஒப்படைக்கப்படும்)
iv. திருமணமானவர் எனில் திருமணச் சான்றிதழ், துணைவரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள்.
v. நிரந்தர மற்றும் தற்காலிக முகவரி
vi. பெயரில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அது தொடர்பான உறுதிமொழிப் பிரகடனம்.

ஒ.இ / ஜனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன
செயலாளர்

எம். என். குணவர்தன
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்)
தொலைபேசி :- 011-2436360
தொலைநகல் :- 011-2320785
மின்னஞ்சல் :- sasadmin2@moj.gov.lk